## இணைப்பு 6

## வளர்ச்சி வரைபின் சரியான விளக்கம்

### வயதுக்குரிய நிறை - பிறப்பிலிருந்து 2 வயது வரை (ஆண்)



**சாதாரண வளர்ச்சி (N)**

பச்சை (அல்லது இளம் பச்சை) வலயத்தில் செல்லும் வளர்ச்சி வரைபு நியமவளர்ச்சி வரைபுக்கு சமாந்தரமாக உயர்ந்து செல்கிறது






## வளர்ச்சிவீழ்ச்சி

1. பச்சை, இளம் பச்சை, செம்மஞ்சள் அல்லது சிவப்பு வலயத்தில் நியம வளர்ச்சி வரைபுக்கு சமாந்தரமாக செல்கின்ற வளர்ச்சி வரைபை கொண்டிருந்த ஒரு பிள்ளையின் வளர்ச்சியின் மந்தகதி (நிறை அதிகரிப்பு போதாமை)




2. பச்சை, இளம் பச்சை, செம்மஞ்சள் அல்லது சிவப்பு வலயத்தில் நியம வளர்ச்சி வரைபுக்கு சமாந்தரமாக செல்கின்ற வளர்ச்சி வரைபைக் கொண்டிருந்த ஒரு பிள்ளையின்.நிறை மாறாதிருத்தல் (நிறை அதிகரிப்பு இல்லாத நிலை அல்லது கிடைநிலை வரைபு)



3. பச்சை, இளம் பச்சை, செம்மஞ்சள் அல்லது சிவப்பு வலயத்தில் நியமவளர்ச்சி வரைபுக்கு சமாந்தரமாக செல்கின்ற வளர்ச்சி வரைபைக் கொண்டிருந்த ஒரு பிள்ளையின் நிறையில் வீழ்ச்சி ஏற்படுதல்




**சாதாரணநிறைகுறைவு (X)**

பிறப்பு நிறையும் வளர்ச்சி வரைபும் செம்மஞ்சள் வலயத்தில் (அத்துடன் நியமவரைபுக்கு சமாந்தரமாக வளரும்) காணப்படும் பிள்ளையும் வளர்ச்சி வரைபு பச்சை (அல்லது இளம் பச்சை) வலயத்திலிருந்து இறங்கி செம்மஞ்சள் வலயத்துக்குள் வரக்காணப்படும் பிள்ளையும்



**தீவிர நிறைகுறைவு (XX)**

பிறப்பு நிறையும் வளர்ச்சி வரைபும் சிவப்பு வலயத்தில் (அத்துடன் நியம வரைபுகளுக்கு சமாந்தரமான வளர்ச்சி காணப்படும் பிள்ளையும் வளர்ச்சி வரைபு செம்மஞ்சள் வலயத்திலிருந்து இறங்கி சிவப்பு வலயத்துக்குள் வரக்காணப்படும் பிள்ளையும்



## “அதிக எடை”

வளர்ச்சி வரைபு ஊதா வலயத்தில் காணப்படுதல் அல்லது பச்சை வலயத்தில் செங்குத்தாக உயர்ந்து நியம வரைபுகளை துரிதமாக வெட்டிச்செல்லுதல்




நீளம்/உயரத்துக்கான நிறை +2SD க்கு மேல் காணப்படும் பிள்ளைகள் “அதிகஎடை” என குறிப்பிடப்படுகிறார்கள். இந்நிலையில் தேசியமட்டத்திலான வளர்ச்சிக் கண்காணிப்பும் மேம்பாடும் நிகழ்ச்சித்திட்டத்தில் நீளம் /உயரத்துக்கான நிறை கணிப்பீடு எல்லாப் பிள்ளைகளுக்கும் செய்யப்படுவதில்லை. ஆகவே தான் வயதுக்குரிய நிறை இந்நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு அண்ணளவான முறையாக ‘அதிகஎடை‘ பிள்ளைகளை அடையாளம் காணப் பயன்படுகிறது. அவ்வாறு வயதுக்குரிய நிறை அடிப்படையில் ‘அதிக எடை‘ என அடையாளம் காணப்பட்ட பிள்ளைகள் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு நீளம் /உயரத்துக்கான நிறை அளவீட்டுக்கு உள்ளாக்கப்பட்டு அதிகஎடை நிலைமையை சரியாக அடையாளம் காணப்படல் அவசியம் .ஏனெனில் சரியான போஷாக்கு தலையீடுகள் ‘அதிக எடைப்‘ பிள்ளையைப் பொறுத்தவரை மிக அவசியமாகும்